(Reg. No. 961/1997)

## செய்திமடல்

## நோபல் லாரேட் அன்னை தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்

துணை அமைப்பு

## அன்னை தெரசா பேரவை

அலுவலகம் :43, நெல்சன்மாணிக்கம் சாலை, சூளைமேடு, சென்னை –600 094
**போன்: 91-44-23743883 Fax: 91-44-23742699 Web: www.motherteresacharities.org**
Email: motherteresain@yahoo.co.in / mtctindia@yahoo.co.in

**சென்னை, ஜூலை 9, 2010**

பேரன்புடையீர்,

வணக்கம். கடந்த மாத செய்திமடல் தங்களுக்கு கிடைத்திருக்கும் என நம்புகிறேன். மத்திய மாநில அரசுகள், கல்கத்தாவில் உள்ள அன்னை தெரசா அவர்களால் ஆரம்பிக்கப்பட்ட **"மிசனரிஸ் ஆப் சாரிட்டி"** மற்றும் பல்வேறு சமுக அமைப்புகளுடன் இணைந்து கல்கத்தா, இந்திய தலைநகர் டில்லி, மற்றும் அனைத்து மாநிலங்களிலும், அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டுவிழா நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்வது குறித்து நமது பேரவை நிர்வாகிகளும் செயல்வீரர்களும் மட்டற்ற மகிழ்ச்சியுடன் உள்ளார்கள். இது குறித்து பாராட்டுகளையும், தங்கள் பகுதிகளில் தாங்கள் மேற்கொள்ளும் செயல் திட்டங்களையும், கடிதம் மற்றும் தொலைபேசி மூலமாக தெரிவித்தவாறு உள்ளார்கள் என்பது நமக்கெல்லாம் மட்டற்ற மகிழ்ச்சி தருவதாகும்.

ஏற்கனவே கூறியது போல தமிழகத்தில் ஒவ்வொரு மாவட்டத்திற்கும் 10,000 உறுப்பினர்கள் சேர்ப்பதற்கான முயற்சிகளை மாவட்ட நிர்வாகிகள் மேற்கொண்டுள்ளார்கள். ஆக, தமிழகத்தில் மட்டும் 3லட்சம் உறுப்பினர்கன் சேர்ப்பதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அதேபோல், **டில்லி, மகாராஷ்டிரா, கர்நாடகா, ஆந்திரா, ஜார்கண்ட்** போன்ற மாநிலங்களிலும் மும்முரமாக பணிகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

அண்மையில், நான் இலங்கைக்கு சென்றிருந்தபோது தொண்டுள்ளம் மிக்க பலரை சந்தித்தேன். அவர்கள் இலங்கையில் அன்னை தெரசா பேரவையின் கிளையை ஆரம்பிப்பதற்கு ஆர்வமாக உள்ளார்கள். அவர்களிடம், நமது பேரவை உறுப்பினர் படிவம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது உறுப்பினர் சேர்க்கை நடைபெற்று வருகிறது. விரைவில் அங்கு ஒரு அலுவலகம் திறக்க ஏற்பாடுகள் நடைபெற்று வருகின்றன, என்பதனை மகிழ்வுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

**நோபல் லாரேட் மதர் தெரசா சாரிட்டபிள் டிரஸ்ட்** மற்றும் கல்கத்தாவில் உள்ள **மிசனரீஸ் ஆப் சாரிட்டி** (அன்னை தெரசா அவர்கள் துவங்கிய) நிறுவனம் ஆகிய இரண்டும் இணைந்து அன்னை தெரசா அவர்களின் நூற்றாண்டு விழாவினை வெகு விமர்சையாக கொண்டாட முடிவு செய்யப்பட்டுள்ளது. இவ்விழாவானது உலகம் போற்றிய உத்தமி அன்னை தெரசா அவர்களின் மாபெரும் அர்பணிப்பு மற்றும் சேவை

ஆகியவற்றை நினைவுப்படுத்தும் விழாவாக கொண்டாடப்படும். அன்னையின் வாழ்வு, சேவை மற்றும் செய்திகள் நம் வாழ்விற்கு நல்ல தூண்டுகோலாக அமையும்.

தங்கள் பகுதிகளிலும் அன்னை தெரசா பேரவையின் நிர்வாகிகள் ஒன்று கூடி அன்னையின் நூற்றாண்டு விழாவினை இவ்வருடம் முழுவதும் (26.8.2010 முதல் 25.8.2011) சிறப்பாக கொண்டாடும்படி அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். வருகிற 26.8.2010, அன்று துவக்க விழாவை விமரிசையாக கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளை செய்வதுடன் முன்று மாதத்திற்கு ஒரு தலைப்பு என்ற அளவில் கீழ்கண்ட தலைப்புகளில் விழா நிகழ்ச்சி களை ஏற்பாடு செய்யுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

1. அனைவருக்கும் கல்வி மற்றும் குழந்தைகள் கல்வி
2. சுற்றுச் சூழல் பாதுகாப்பு, –சுகாதார விழிப்புணர்வு
3. மகளிர் நலன் மற்றும் மேம்பாடு, – மகளிர் உரிமைகள்
4. அனைவருக்கும் உணவு மற்றும் அடிப்படை சட்ட விழிப்புணர்வு

பேரவை உறுப்பினர்கள் தங்கள் பகுதிகளில் இவற்றைக் குறித்த விழிப்புணர்வு கருத்தரங்குகள், முகாம்கள் நடத்தலாம். விழாவின் மற்றொரு பகுதியாக,

- ♣ பள்ளிகளில் போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்குதல்
- ♣ மனித சங்கிலி / கலந்து கொள்வோருக்கு அன்னையின் பெயர் பொறித்த தொப்பி, மேல் சட்டை விநியோகித்தல்
- ♣ நினைவு பரிசு வழங்குதல்
- ♣ மரக்கன்றுகள் நடுதல்
- ♣ அன்னையின் வாழ்வியல் குறித்த கண்காட்சி ஏற்பாடு செய்தல்
- ♣ அன்னையின் நினைவாக அன்னதானம் வழங்குதல்.

போன்ற நிகழ்சிகளை பட்டி தொட்டி யெல்லாம் செயல்படுத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும் ஐக்கிய நாடுகளின் சபை (UNO)–வின் ஒரு அங்கமான ஐக்கிய நாடுகளின் அறிவியல் பண்பாட்டு கல்வி நிறுவனம் (UNESCO) நம்மோடு இணைந்து இவ்விழாவினை நடத்த தீர்மானித்துள்ளனர்.

ஒரு மகிழச்சியான செய்தி, மதிப்பிற்குறிய இந்திய ஜனாதிபதி மாண்புமிகு **திருமதி பிரதீபா தேவ்சிங் பட்டேல்** மற்றும் டில்லி முதலமைச்சர் **திருமதி.ஷீலா தீட்சித்** ஆகியோர் 28.8.2010 அன்று தலைநகர் டில்லியில் நூற்றாண்டு விழா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ள இசைந்துள்ளர்கள்.

அன்னை தெரசா பேரவையின் தேசிய நிர்வாகிகள் வெகு விரைவில் நியமிக்கப்பட உள்ளார்கள் மேலும் பேரவையின் ஆளும் குழுவுக்கு (Governing Body) உறுப்பினர்கள் நியமிக்கப்பட இருக்கிறார்கள் இச்சேவையில் ஆர்வமும் தனித்தன்மையும் கொண்ட சிறப்புமிக்க நபர்கள் இருப்பின், தேசிய ஆளும் குழுவில் (Governing Body) உறுப்பினராக சேர்த்துக் கொள்ளபடுவார்கள். பேரவையின் விரிவான வளர்ச்சிக்கு அவர்கள் சேவை தேவைப்படுகிறது.

அன்னை தெரசா பேரவையின் சார்பாக கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை பகுதியில் செயல்பட்டு வரும் இலவச கணினி மையத்தை கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் **திரு. V.K. சண்முகம் IAS.,** அவர்கள் 5.5.2010 அன்று பார்வையிட்டு பின்வருமாறு குறிப்பிட்டுள்ளார்.

"இன்று பிற்பகல் அன்னை தேரசா கணிணி பயிற்சி மையம் ஊத்தங்கரையில் பார்வையிடபட்டது.

**திரு. விவேகானந்தன் (அன்னை தெரசா பேரவை மாநிலத் துணைத்தலைவர்)** அவர்களின் சீரிய மேற்பார்வையில் இயங்கும் இந்நிறுவனம் இருபாலருக்கும் கணிணி பயிற்சி வழங்கியும் மகளிருக்கு முன்னுரிமையும் முதலிடமும் வழங்குவது போற்றுதற் குரியது.

மேலும் மேலும் பணி சிறக்க, நாளும் நாளும் நற்பணி தொடர அன்பு வாழ்த்துக்கள்"

**ஒப்பம் – V.K. சண்முகம் ., IAS**

இப்பாராட்டு கிருஷ்ணகிரி மாவட்ட அன்னை தெரசா பேரவையின் நிர்வாகிகளுக்கு அதிக உற்சாகத்தை கொடுத்துள்ளது. அவர்களின் சேவைக்கு இது ஒரு நற்சான்று. அங்கு உறுப்பினர் சேர்க்கை முழுவீச்சில் நடைபெற்று வருகிறது. கிருஷ்ணகிரி மாவட்ட அன்னை தெரசா பேரவை நிர்வாகிகள் மாற்றியமைக்கப்படுகிறாரர்கள்.

தலைவராக **திரு. Dr. D.P. ராஜா வெங்கட்ராமன், M.E,Ph.D,** பொது செயலாளராக **திரு.C.வீரமணி**, பொருளாளராக **திரு.K.ராமசந்திரன்**, துணைத்தலைவர்களாக **திரு. சண்முகசுந்தரம்**, **திருமதி. ஐ.ரோஸ்லின் ஜீவா, திரு. சின்னராஜ், திரு.G. ராமன், செயலாளர்களாக திருமதி.ஜெயலஷ்மி**, **திரு.ஒலைமுருகன்** மற்றும் சட்ட ஆலோசகராக **திரு. M.சரவணன் B.A., BL.,** ஆகியோர் புதிய நிர்வாகிகளாக நியமிக்கப்படுகிறார்கள். **திரு. B.ரவி** மாநில செயற்குழு உறுப்பினராக நியமிக்கப்படுகிறார்.

**வடசென்னை மாவட்ட அன்னை தெரசா பேரவைத் நிர்வாகிகள்** ஒன்றிணைந்து, **GKM காலனி, கொளத்தூரில் டாக்டர் அகர்வால் கண்மருத்துவமனையோடு** இணைந்து கண் சிகிச்சை முகாம் ஒன்றினை நடத்தினர். இதனை சென்னை **மாதாவரம் காவல்துறை உதவி ஆணையர் திரு. லாயிட்ஸ் சந்திரா** அவர்கள் துவக்கி வைத்தார்கள். சுமார் 150 பேர் இந்த முகாமில் கலந்து கொண்டனர். 30 பேர் கண் அறுவை சிகிச்சை இலவசமாக செய்து கொண்டனர். இது போன்ற சமுதாய மேம்பாட்டிற்குரிய முகாம்களை அவ்வப்போது தங்கள் பகுதிகளிலும் நடத்துமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

மேலும், இரத்ததான முகாம்கள், பல் மருத்துவ முகாம்கள் மற்றும், தங்கள் பகுதி மக்களுக்கு தேவையான செயல்திட்டங்களை வகுத்து செயல்படுத்திடுமாறும் அன்புடன் வேண்டுகிறோம்.

நன்றி,

**"Service to mankind is Service to God"**

அன்புடன்,

**ஜி.கே.தாஸ்**

மேனேஜிங் டிரஸ்டி